SRI A. VEDARATHNAM : இனும் நிலங்களுக்கு ரயத்துவாரி விகிதப்படி வரிவசூல் செய்ய வேண்டுமென்று சட்டம் பிறப்பித்திருப்பதால் அப்பொழுதே இதை இனும் தாரர்களுக்கு தெரிவித்திருக்க வேண்டியதில்லையா ? பல வருடங்களுக்குப் பின்னுல் தெரிவித்ததோடு பல ஆண்டுகளுக்குள்ள கிஸ்தியை ஒரே ஆண்டில் கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவது சரியா ? மேலும் கோவில்களிலுள்ள விக்கிரகங்களைத் தவிர பாக்கியுள்ள எல்லாவற்றையும் ஜப்தி செய்ய வேண்டுமென்று அதிகாரிகள உத்தரவு போட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்த உத்திரவை நிறுத்தி வைக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூன்று வருட வரி கொடுக்க வேண்டுமென்று டிமாண்ட் நோட்டீஸ் இருக்கிறது. வசூல் செய்யும் போது மூன்று வருடத்திற்கு எல்லாரும் கொடுப்பதில்லை. கேட்பது, மூன்று வருடங்களுக்குள்ளதைப் கேட்பது என்று கேட்கப்பட்டிருக்கிறது. கொடுக்க வேண்டியதை ஏறக் குறைய கொடுத்தால் பரவாயில்லை.

SRI T. SAMPATH : May I know whether the Government would consider the feasibility of collecting these kists on instalment basis?

THE HON. SRI M. A. MANICKAVELU : Each case will have to be judged on its own merits.

SRI V. SUBBIAH : சிறிய தேவஸ்தான நிலங்களுக்கு மூன்று பசலிகளுக்கு வசூல் செய்திருக்கிருர்கள். தேவஸ்தான அதிகாரிகள் அதற்கு ரசீதும் வைத்திருக்கிருர்கள். அப்படி யிருக்க அரசாங்கம் திரும்பவும் டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து வசூலித்து வருகிருர்கள். அதை திரும்ப கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது பற்றி எழுதி அனுப்பினுல் விசாரிக்கிறேன்.

Portrait of Tiruvalluvar in postage stamps

* 547 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state whether this Government was consulted in drawing the portrait of Tiruvalluvar for the postage stamp by the Posts and Telegraphs department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI M. P. SARATHI : அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதிலளித்தார்கள். தமிழ் தலைவராகிய திருவள்ளுவரின் உருவப் படத்தை வெளியிடும்போது நமது அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் ஏன் கலந்து ஆலோசிக்கக் கூடாது ? திருவள்ளுவர் இறந்த நாள் என்று. "டெத் ஆன்வர்சரி" என்று அப்பொழுது வெளியிடப்பட்ட கவரில் குறிப்பிட்டிருக்கிறது. அது சரியா ? அதை நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருவள்ளுவர் படம் தபால் ஸ்டாம்ப்களில் இருப்பது விரும்பப்படுவது என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது. அதற் கிணங்க அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அந்த உருவப் படத்தை எப்படி எழுதுவது என்பது பற்றி இந்த அரசாங்கம் தெரிவிக்க வேண்டிய நிமித்தமில்லை. உருவப் படத்தைப் பற்றி ஏகோபித்தக் கருத்து கூற முடியாது. திருவள்ளுவரை நேரில் பார்த்தவர்கள் நம்மிடையெ இல்லை. திருவள்ளுவர் இருந்த காலத்தில் படம் வரையப்பட்டதுமில்லை. ஆகவே, இதில் விவாதத்தைப் கிளப்புவது சரியல்ல.

24th March 1960]

SRI V. K. KRISHNAMURTHY : திருவள்ளுவரின் உருவப் படம் புதைப் பொருளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதா ? அல்லது வள்ளுவர் தந்த குறளிலிருந்து வரையப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறளிலிருந்துதான் இது வரையப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

SRI M. KARUNANITHI : தபால் தலைகளுக்கு என்று வரையப்பட்ட திருவள்ளுவர் ஓவியத்தை சட்டமன்றத்தில் வைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அம்மாதிரி ஒரு படத்தை இங்கு சமர்ப்பிக்க முன் வந்தால் கனம் சபாநாயகர் அவர்கள் அதைப் பற்றி யோசிப்பார்கள்.

SRI M. P. SARATHI : நான் கேட்பது திருவள்ளுவருடைய உருவத்தைப் பற்றி அல்ல. அன்று வெளியிடப்பட்ட அஞ்சல் உறையில் திருவள்ளுவர் டெத் ஆனிவர்ஸரி (திருவள்ளுவர் இறந்த நாள்) என்று குறிப்பிட்டிருந்தது. இதைப் பற்றி அரசாங்கத்திற்கு தெரியுமா ? அவ் விதம் குறிப்பிட்டிருப்பது சரி என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வெளியிடப்பட்ட அன்று நானும் பார்த்தேன். எனக்கும் அது பிடிக்கவில்லை. எனினும் இது மத்திய அரசாங்க அமைச்சர் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அவரும் ஒரு தமிழர். இதில் நாம் ஒன்றும் செய்வதிற்கில்லை.

SRI K. VINAYAKAM : திருவள்ளுவர் அவர் இயற்றிய குறளில் " மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் " என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால் இப்போது வெளியிடப்பட்டிருக்கும் திரு வள்ளுவர் படத்தில் தாடியும் மீசையும் முடியும் காட்டப்பட்டிருக்கிறது. குறளில் எழுதப்பட்டதின்படி இந்த உருவம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் இது வித்தியாசமாயல்லவா இருக்கிறது ? இதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி ஒரு அரங்கு ஏற்படுத்துவதாக இருந்தால் அதில் பல கருத்துக்களை தெரிவிக்கலாம்.

Prosecution of Office-bearers of Co-operative Societies in the Kanyakumari district

* 548 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of cases referred to the Police in 1959 for prosecution by the District Registrar of Co-operative Societies, Kanyakumari District against the Presidents and Office-bearers of Co-operative Societies;

(*b*) whether charge-sheets have been framed against the delinquents in all cases ; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Six cases.

(*b*) & (*c*) These cases are still in the investigation stage. Charge sheets can be filed only on the completion of the investigations.